சார்பு நீதிமன்றம், மேலூர்
MCOP No.25/2024

பெயர் : முருகேசன்
தகப்பனார் பெயர் :சங்கரநாராயணன்
கணவர் பெயர் :
வயது :49
கிராமம் :அய்யர்பங்களா, G.R.நகர்
வட்டம் :மதுரை
தொழில் :ஐஸ்கிரீம் தொழில்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
11.03.2026
ம.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 04.02.2024 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா-ஆ.1. ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் ம.சா.ஆ.2. தேவதாஸ் மருத்துவமனையால் வழங்கப்பட்ட மருத்துவவிடுவிப்பு ஆவணம் ம.சா.ஆ.3. தேவதாஸ் மருத்துவமனையால் வழங்கப்பட்ட இறுதிபில் ம.சா.ஆ.4. தேவதாஸ் மருத்துவமனையால் வழங்கப்பட்ட பல்வகை பில்கள் ரசீது ம.சா.ஆ.5. தேவதாஸ் மருத்துவமனை மருந்தகத்தால் வழங்கப்பட்டமருத்துவ பில்கள் ம.சா.ஆ.6. ஆதார் அட்டை ஒளிநகல் ம.சா.ஆ.7. வங்கிகணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் ஒளிநகல் ம.சா.ஆ.8. PAN கார்டு ஒளிநகல் ம.சா.ஆ.9. ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1.

குறுக்கு விசாரணை :

விபத்தானது மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள தேவர் சிலை சிக்னல் அருகே நடந்தது என்றால் சரிதான். அவ்வாறு வாகனங்கள் செல்லும் போது சிக்னல் கிடைத்த பிறகு தான் செல்ல முடியும் என்றால் சரிதான். அவ்வாறு சிக்னல் கிடைத்த பிறகு பேருந்தின் இடதுபுறமாக நான் பேருந்தை முந்தி

சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு பேருந்தை முந்தி செல்ல முயன்ற போது பேருந்தின் இடதுபுற பக்கவாட்டில் நானே நிலைதடுமாறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கான முழு காரணமும் என்னுடைய கவனக்குறைவு என்றால் சரியல்ல. பேருந்தானது சிக்னல் கிடைத்தவுடன் என் பின்புறத்தில் இருந்து வேகமாக வந்து என்னை இடித்துவிட்டார்கள். விபத்திற்கான காரணம் அரசு பேருந்து ஓட்டுநர் கவனக்குறைவு அல்ல என்றும் என் கவனகுறைவு தான் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் 03.02.2024அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாமல் இழப்பீடு பெறவேண்டும் என்று எண்ணி 04.02.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாலுமே விபத்து அரசு பேருந்து ஓ,ட்டுநரின் கவனக்குறைவு இருந்திருந்தால் அன்றைய தினமே வாகனத்தையும் அரசு பேருந்து ஓட்டுநரையும் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றிருப்பார்கள் என்றும் என் மேல் தவறு இருப்பதால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இடித்து விட்டு அரசு பேருந்து ஓட்டுநர் நிற்காமல் சென்றுவிட்டார் அதனால் தான் அவர் மீது முதல் தகவல்அறிக்கை மறுநாள் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்தவுடன் அஸ்வினி மருத்துவமனை, மூன்றுமாவடியில் முதல் உதவி சிகிச்சை எடுத்து கொண்டேன். அதன்பிறகு அன்றைய தினமே காலை 10.30 மணியளவில் தேவதாஸ் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றுவிட்டேன். சுமார் 6 நாட்கள் அறுவை சிகிச்சை முடிந்து உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். 03.02.2024 முதல் 07.02.2024 வரை நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேனா என்றால் ஆமாம். அங்கிருந்து நான் பூரண குணமாகி விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். SM Enterprises என்ற நிறுவனத்தில் நான் 2016ம் ஆண்டில் இருந்து நடத்தி வருகிறேன். அது என்னுடைய நிறுவனம் ஆகும். மேற்படி தொழிலானது ஐஸ்கிரீம் தயாரிக்கும் பிரீட்ஜரை

விநியோகம் செய்யும் நிறுவனம் ஆகும். எனக்கு அவ்வாற தொழில் செய்து எவ்வளவு வருமானம் ஈட்டி வந்தேன் என்பதை நிருபிக்க ஆவணம்தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பபட்டால் தாக்கல் செய்கிறேன். அவ்வாறு ஒரு நிறுவனமே இல்லை என்றும் நான் வழக்கில் அதிக இழப்பீடு பெறவேண்டும் என்று எண்ணி நான் சம்பளம் ஈட்டி வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 முதல் 6 வரை உள்ள ஆவணங்கள் உரிய மருத்துவ அலுவலரை விசாரித்தால் தான் உண்மைதன்மை தெரியவரும் என்றும் அது உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.11 19:13:38 +0530

Sub Judge

Melur